www.Padasalai.Net

## சுருக்கம்

பள்ளிக்கல்வி - ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்களும் 2024-2025-ஆம் கல்வியாண்டில் இருந்து செயல்படுத்துதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்(தொக3(2))துறை**

அரசாணை (நிலை) எண். 138

நாள் 18.06.2024
திருவள்ளுவர் ஆண்டு-2055
குரோதி வருடம், ஆனி-4

படிக்கப்பட்டவை: -

1. அரசாணை (நிலை) எண்.155 பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 17.09.2022.
2. அரசாணை (நிலை) எண் 217, பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 19.12.2022.
3. அரசாணை (நிலை) எண் 165, பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 26.09.2023.
4. அரசாணை (நிலை) எண். 142, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 11.10.2021.
5. அரசாணை (நிலை) எண். 144, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 25.08.2022.
6. அரசாணை (நிலை) எண்.132, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 28.07.2023.
7. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண். 29481/கே2/2023 , நாள் 30.05.2024.

/•/

ஆணை: -

தமிழ்நாட்டில் 2022-23 மற்றும் 2023-2024 -ஆம் கல்வியாண்டில் அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் (Smart Class Rooms) ஏற்படுத்திடவும் மற்றும் 2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசு

www.Padasalai.Net



நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi Tech Labs) அமைப்பதற்கான பணிகளைத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் மேற்கொள்ள அனுமதியளித்து மேலே ஒன்று முதல் ஆறு வரை படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேற்குறிப்பிட்ட ஆணைகளை செயல்படுத்தும் வகையில், பள்ளிக் கல்வித் துறை, மின்னியம் ஆக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் (Digital Content) வளங்களை தயாரித்து திறன்மிகு வகுப்பறைகள் மூலம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும், இம்முன்முயற்சியானது மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலை உருவாக்குவதாகவும், கற்றல் செயல்பாடுகளில் ஈடுபாட்டினை ஏற்படுத்தி மேம்பாட்டினை அடையவைக்கக் கூடியதாகவும் ஆசிரியர்கள் கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளை வகுப்பறையில் சிறப்பாக கொண்டு செல்வதற்கு உறுதுணையாகவும் இருந்திடும் என்றும் 2024-25-ஆம் கல்வியாண்டில் அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் தொடங்கப்படுவதன் முதற்கட்டமாக, 6 மாவட்டங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 16 ஒன்றியங்களில் (EBB) உள்ள 493 பள்ளிகளில் 634 திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்பட்டு உள்ளன என்றும் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்களும் 2024-2025-ஆம் கல்வியாண்டில் இருந்து செயல்படுத்துவதற்கு, தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் அனைத்து நிலை அலுவலர்களுக்கான பணிகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு செயல்முறைகள் (SOP) வெளியிடுவது அவசியம் என தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்கு பின், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்களும் 2024-2025-ஆம் கல்வியாண்டில் இருந்து முறையாக ஏற்படுத்துவதற்கும் மற்றும் அதனை பராமரிப்பு செய்வதற்கும் தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் அனைத்து நிலை அலுவலர்களுக்கான பணிகள் மற்றும்

www.Padasalai.Net



பொறுப்புகள் சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு செயல்முறைகளை (SOP) இவ்வாணையின் இணைப்புகளில் (இணைப்பு 1 - திறன்மிகு வகுப்பறைகளை பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள் மற்றும் இணைப்பு -2- உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் / திறன்மிகு வகுப்பறைகள் பராமரிப்பு நெறிமுறைகள்) உள்ளவாறு வகுத்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
அலுவலக நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்(அகஇ)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/06/2024
பிரிவு அலுவலர்.
18.6.24

**தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6**

ந.க.எண்.29481/கே2/2023 நாள்.21.06.2024.

நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக்கல்வி) அனுப்பப்படுகிறது.

21/06/2024
**தொடக்கக்கல்வி இயக்குநர்**

21/6/24

பெறுநர்
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
(தொடக்கக்கல்வி)

www.Padasalai.Net

## இணைப்பு-1

**திறன்மிகு வகுப்பறைகளை பயன்படுத்துவதற்கான நிலையான வழிகாட்டு செயல்முறைகள்:**

- திறன்மிகு வகுப்பறையை கையாள பள்ளிக்கு ஒரு ஆசிரியரை சார்ந்த தலைமை ஆசிரியர் நியமிக்க வேண்டும்.
- கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்காக மட்டுமே திறன்மிகு வகுப்பறையை தினமும் பயன்படுத்த வேண்டும்.
- பொறுப்பாசிரியர் இல்லாமல் திறன்மிகு வகுப்பறையை மாணவர்கள் கையாளுவதை தவிர்த்தல் வேண்டும்.
- ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புக்குரிய மின்னிய பாடப் பொருள்களை திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்தி கற்பித்தலை திட்டமிட்டு கொள்ள வேண்டும்.
- திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்தும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் முதற்கட்டமாக திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்துவதற்கான கால அட்டவணை ஒன்றை தயாரித்தல் வேண்டும்.
- இக்கால அட்டவணையை அனைத்து ஆசிரியர்களும் கலந்து ஆலோசித்து தங்கள் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் பாடங்களுக்கு ஏற்றவாறு திட்டமிட்டு தயாரித்தல் வேண்டும்.
- எடுத்துக்காட்டாக பல் வகுப்பாக இருப்பின் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் முதல் நாளன்று திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்தினால் மறுநாள் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்த வேண்டும். அல்லது ஒரே நாளில் முதல் பாட வேளையில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களும் அடுத்த பாட வேளையில் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு கற்புக்கும் ஆசிரியர்களும் பயன்படுத்த வேண்டும். அல்லது ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள்

www.Padasalai.Net

முற்பகலிலும் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் பிற்பகலிலும் திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்த வேண்டும். தனி வகுப்பாக இருப்பின் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைச் சூழலுக்கு ஏற்ப திட்டமிட்டு கொள்ள வேண்டும்.

- மேலும் நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் திறன்மிகு வகுப்பறையை பயன்படுத்துவதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்

- மின்னிய பாடப்பொருட்கள் ஆசிரியர்களுக்கான காணொலிகளாகவும் மற்றும் மாணவர்களுக்கான காணொலிகளாகவும் தனித்தனியே இடம் பெற்றிருக்கும். ஆசிரியர்களுக்கான காணொலிகளை தங்கள் வகுப்பறைக்கு செல்வதற்கு முன்பாக ஆசிரியர்கள் திட்டமிடுவதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கான காணொலிகள் ஒவ்வொரு கட்டகத்திற்கும் அந்தந்த நாள்களுக்கான செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு இடம் பெற்றிருக்கும்.

- ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பிற்கான ஆசிரியர் கையேட்டில் (THB) உள்ள செயல்பாடுகளை வகுப்பறையில் செயல்படுத்தும் பொழுது அச்செயல்பாட்டிற்கு தேவையான மாணவர் காணொலிகள் இருப்பின் அதனை பயன்படுத்தி மாணவர்களுக்கு அச்செயல்பாட்டை கற்பித்தல் வேண்டும்.

- எடுத்துக்காட்டாக ஆயத்தப்படுத்துதல் செயல்பாட்டிற்கான காணொலி ஒரு பாட்டாகவோ அல்லது கதை வடிவிலோ இருப்பின் அதனை திறன்மிகு வகுப்பறையின் மூலம் காண்பித்து ஆயத்தப்படுத்துதல் செயல்பாட்டை வகுப்பறையில் நிகழ்த்த வேண்டும்.

- இதுபோன்று ஆசிரியர் கையேட்டில் வழங்கப்பட்டுள்ள மற்ற செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு மாணவர்களுக்கான காணொலிகள் இடம் பெற்றிருப்பின் அதனை வகுப்பறையில் காண்பித்து அச்செயல்பாட்டை நிகழ்த்த வேண்டும்.

www.Padasalai.Net

திறன்மிகு வகுப்பறையை எவ்வாறு உள் நுழைந்து பயன்படுத்த வேண்டும் என்பதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றவும்:


STEP - 1




Login using the above URL, enter the teacher ID & Password in the Login Page.

tntp.tnschools.gov.in என்னும் வலைதளம் வழியாக ஆசிரியருக்கான ID மற்றும் Password பயன்படுத்தி Login செய்ய வேண்டும்.


STEP - 2



You will find the Digital Catalogue (Digital Content) list on the first page. Please select the Class & Subject that you need to take in the class.

இணைய முதல் பக்கத்தில், Digital Catalogue list (Digital Content)-ல் கற்பிக்க வேண்டிய பாடம் மற்றும் வகுப்பை 'select' செய்ய வேண்டும்.

STEP - 3





Then you will find the module list. Select the Module that you want to play.

கட்டகத்திற்கான பட்டியலில் இருந்து பொருத்தமான மற்றும் தேவையான கட்டகத்தினை தேர்ந்தெடுக்க வேண்டும்.

www.Padasalai.Net

STEP-4




Then you will find the multimedia content to play for students.

Note: You can only view the next content if the previous multimedia content has been opened.

அதில் வீடியோ அல்லது மல்டிமீடியா பட்டியல் இடம்பெற்று இருக்கும்.

குறிப்பு: ஒவ்வொரு முந்தைய Contentயும் முடித்தால் மட்டுமே அடுத்த Multimedia content தொடர்ச்சியாகத் திறக்கும்.

பிரிவு அலுவலர்.

இணைப்பு-2

## <u>உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் / திறன்மிகு வகுப்பறைகள் பராமரிப்பு நெறிமுறைகள்</u>

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் இணை இயக்குநர் :**

- KELTRON நிறுவனம் மூலம் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் சார்ந்த பொருட்கள் மாவட்ட வாரியாக பள்ளிகளுக்கு வழங்கப்படும் கால அட்டவணையை பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பி பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.

**தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் இணை இயக்குநர்கள்:**

- உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் பள்ளிகளில் நிறுவப்படுவதற்கு கள அலுவலர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குபவர் ஆவார்.
- இப்பணிகளின் செயலாக்கம் குறித்து KELTRON நிறுவனத்தால் வகுக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, பள்ளிகளில் பணிகள் தொய்வின்றி நடப்பதற்கு முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி), உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி ), மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஆகியோருக்கு உடனுக்குடன் அறிவுரைகள் நல்குவதோடு, பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாவட்டக் கல்வி அலுவலர் :**

- மாவட்டங்களில் உள்ள உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி), மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (ICT), மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (EMIS), மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (Civil), மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (SoE) மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (Elementary) ஆகியோரின் பணி முன்னேற்றம் குறித்து தொடர்பு கொள்ளுதல்.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநில ஒருங்கிணைப்பாளர்:**

- KELTRON நிறுவனத்தினர் உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகளை நிறுவுதல் சார்ந்து மேற்கொள்ளும்

அனைத்துப் பணிகளையும், மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (ICT, EMIS, Civil, SoE & Elementary) அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்பு இவ்வலுவலரைச் சார்ந்ததாகும்.

- தொடக்கக் கல்வி இயக்ககம், முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலைக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி) ஆகியவற்றின் தொடர்பு அலுவலராக மாநில ஒருங்கிணைப்பாளர் செயல்பட வேண்டும்.
- இப்பணிகளில் எந்நிலையில் சுணக்கம் ஏற்படினும், KELTRON நிறுவனத்திற்கும் கள அலுவலருக்குமான தகவல் பரிமாற்றங்களைத் தொய்வின்றி மேற்கொள்ளும் பொறுப்பு இவ்வலுவலரைச் சார்ந்ததாகும்.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கட்டடப் பொறியாளர் :**

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினருடன் உடனுக்குடன் தொடர்பு கொண்டு உயர்தொழில் நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்பட உள்ள வகுப்பறைகளில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.
- திட்டப் பொறியாளர்களைக் கொண்டு உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் ஆயத்த நிலையில் உள்ள விவரங்களை உறுதி செய்தல்.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முதன்மை தொழில்நுட்ப அலுவலர் (CTO) – EMIS :**

- KELTRON நிறுவனத்தினர் உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகளை நிறுவும் பணியினை கண்காணிப்பதற்கான (Tracking Portal) வசதியினை உருவாக்குதல் மற்றும் தரவுகளை ஆய்வுக்கு முன்னிலைப்படுத்துதல்.
- CCC (Command and Control Centre) மையத்தில் dashboard மூலமாக விவரங்களைத் தொகுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- Dashboard வாயிலாக பெறப்படும் விவரங்களை உயர் அலுவலர்களின் பார்வைக்கு கொண்டு செல்லுதல்.

**முதன்மைக் கல்வி அலுவலர்கள் :**

- உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் ஆகியவை பள்ளிகளில் நிறுவப்படுவதற்கு சார்ந்த, மாவட்டக் கல்வி

www.Padasalai.Net

அலுவலர் (இடைநிலைக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி), உதவி திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி ), வட்டாரக் கல்வி அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (ICT, EMIS, Civil, SoE & Elementary), மாவட்ட கட்டடப் பொறியாளர்கள் ஆகியோருக்கு வகுக்கப்பட்டுள்ள பணிகளை உடனுக்குடன் ஆய்வு மேற்கொண்டு, பணிகள் தொய்வின்றி நடைபெறுவதை உறுதி செய்யும் பொறுப்பு இவ்வலுவலரைச் சார்ந்ததாகும்.

- மாவட்ட அளவில் KELTRON நிறுவனத்தால் நிறுவப்படவுள்ள மாதிரி உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகளை இத்திட்டம் செயல்டுத்தப்படவுள்ள பள்ளிகளை பார்வையிட செய்து இது சார்ந்து அவர்களது பள்ளிகளில் செயல்படுத்த திட்டமிடல் செய்வதற்கு வழிகாட்டுதல் வேண்டும்.
- KELTRON நிறுவனத்தால் நியமிக்கப்படவுள்ள களப்பணி ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொண்டு பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- மாநிலக் கட்டுப்பாட்டு மையத்திற்கு (CCC) நிறுவப்படும் dashboard போன்று முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கும் dashboard நிறுவப்படும். இதன் வாயிலாக முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் திறன்மிகு வகுப்பறைகளின் செயல்பாடுகள் குறித்து உடனுக்குடன் அறிய இயலும். குறைபாடுகள் இருப்பின், மாநில கட்டுப்பாட்டு மையத்திற்கு தெரிவிக்கப்பட்டவுடன் நிவர்த்தி செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.

**மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி):**

- உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி ), வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து, தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படவுள்ள பள்ளிகளில் வகுப்பறைகளை தயார் நிலையில் வைத்தல், இணைய வசதியை உருவாக்குதல், KELTRON நிறுவனம் பணிகளை மேற்கொள்வதற்கு வகுக்கப்பட்டுள்ள கால அட்டவணையை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் மற்றும் நிறுவப்பட்ட விவரத்தை கல்வியியல் மேலாண்மை தகவல் முறைமை

இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவது இவ்வலுவலரது பொறுப்பு ஆகும்.

**மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி):**

- வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து, தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படவுள்ள பள்ளிகளில் வகுப்பறைகளை தயார் நிலையில் வைத்தல், இணைய வசதியை உருவாக்குதல், KELTRON நிறுவனம் பணிகளை மேற்கொள்வதற்கு வகுக்கப்பட்டுள்ள கால அட்டவணையை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் மற்றும் நிறுவப்பட்ட விவரத்தை கல்வியியல் மேலாண்மை தகவல் முறைமை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவது இவ்வலுவலரது பொறுப்பு ஆகும்.

**வட்டாரக் கல்வி அலுவலர்கள்:**

- தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படவுள்ள பள்ளிகளில் வகுப்பறைகளை தயார் நிலையில் வைத்தல், இணைய வசதியை உருவாக்குதல், KELTRON நிறுவனம் பணிகளை மேற்கொள்வதற்கு வகுக்கப்பட்டுள்ள கால அட்டவணையை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல், நிறுவப்பட்ட விவரத்தை கல்வியியல் மேலாண்மை தகவல் முறைமை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல், பள்ளிப் பார்வையின் போது முறையாகப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் மற்றும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்வது இவ்வலுவலரது பொறுப்பு ஆகும்.

**வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்:**

- தங்களது மாவட்டத்திற்குள் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படவுள்ள பள்ளிகள் சார்ந்து மாவட்ட மற்றும் வட்டார உயர் அலுவலர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டவுடன், அப்பள்ளிகளுக்கு பொறுப்பான ஆசிரியர்

www.Padasalai.Net

பயிற்றுநர்களைக் கொண்டு பள்ளிகளில் இப்பணிகள் மேற்கொள்ளும் விவரத்தினை தலைமை ஆசிரியரிடம் தெரிவித்தல், நிறுவப்பட்ட விவரங்களை கல்வியியல் மேலாண்மை தகவல் முறைமை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வழிகாட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்வது இவ்வலுவலரது பொறுப்பாகும்.

**ஆசிரியர் பயிற்றுநர்கள்:**

- தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படவுள்ள பள்ளிகள் சார்ந்த விவரத்தினை தலைமை ஆசிரியரிடம் தெரிவித்தல், நிறுவப்பட்ட விவரங்களை கல்வியியல் மேலாண்மை தகவல் முறைமை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வழிகாட்டுதல், திறன்மிகு வகுப்பறைகள் மற்றும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் சார்ந்து பள்ளியின் தலைமையாசிரியர்கள் அல்லது ஆசிரியர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வது இவ்வலுவலரது பொறுப்பாகும்.

**தலைமை ஆசிரியர்கள்:**

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தங்களது பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்படும் போதும் நிறுவப்பட்டப்பின்னரும் கீழ்க்காணும் அறிவுரைகளை தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

**உயர்தொழில்நுட்ப ஆய்வகம் பொதுவானவை:**

- ஆய்வகம் நல்ல வெளிச்சமாகவும், காற்றோட்டமாகவும் இருத்தல் வேண்டும்.
- ஆய்வகத்தில் உள்ள ஒவ்வொரு ஜன்னலையும் அதற்குரிய அளவுடைய திரை சீலைகளை (Screen Cloth / Cover) கொண்டு திரையிடுதல் வேண்டும்.
- ஆய்வகத்தின் அனைத்து நுழைவாயில்கள் மற்றும் ஜன்னல்களில் வலிமையான மற்றும் உறுதியான இரும்புக் கதவுகளை (Grill gate) அமைத்தல் வேண்டும்.

- ஆய்வகத்தின் உட்புற சுவர்கள் மற்றும் உட்புற மேற்கூரைகளில் வெள்ளை நிற Paintஐ பயன்படுத்தி வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும்.
- ஆய்வகத்தின் அனைத்து ஜன்னல்கள் மற்றும் கதவுகளில் Light Grey Enamel Paint - Matt finish-ல் வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும்.
- ஆய்வகத்தின் சுவர்கள், ஜன்னல்கள், கதவுகளில் உள்ள ஓட்டைகளை முறையாக சரி செய்தல் வேண்டும்.
- ஆய்வகத்தில் குறைந்த பட்சம் 4 மின்விளக்குகள் மற்றும் 4 மின்விசிறிகள் இருத்தல் வேண்டும்.
- ஆய்வகத்தில் மும்முனை மின் இணைப்பு (3 Phase Connection) பெறப்பட்டு உள்ளதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- ஆய்வகத்தில் உள்ள ஒவ்வொரு Moniter, keyboard, Desktops போன்றவற்றினை பயன்பாட்டில் இல்லாத போது தனித்தனியாக தூசி படியாதவாறு பாதுகாத்தல் வேண்டும்.
- ஆய்வகத்தில் உயர் / தாழ் மின்னழுத்த குறைபாடுகள் இருப்பின் அதை நிவர்த்தி செய்தல் வேண்டும். உயர் / தாழ் மின்னழுத்த குறைபாடுகள் தொடர்ந்து இருப்பின் அதனை அருகாமை மின்சார அலுவலகத்தை தொடர் கொண்டு புகார் பதிவு செய்து குறைபாட்டை சரி செய்ய வேண்டும்.
- ஆய்வகத்தில் உள்ள Cupboard-களில் தேவையற்ற அட்டைப் பெட்டிகள், பதிவேடுகள், புத்தகங்கள் போன்ற ஆய்வகத்திற்கு சம்பந்தமில்லாத பொருட்களைக் கொண்டு நிரப்பி வைத்தல் கூடாது.
- ஆய்வகத்தில் கண்டிப்பாக பார்வையாளர் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டு வரவேண்டும்.
- ஆய்வகத்தை வாரம்தோறும் திங்கட்கிழமைகளில் Mass cleaning செயல்பாடு மூலம் ஒரே நேரத்தில் தூய்மை செய்தல் வேண்டும்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆய்வக உதவியாளர்களை அவர்கள் பணியாற்றும் பள்ளிகளில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை பராமரிக்க பயன்படுத்துதல் வேண்டும்.
- ஆய்வகத்தை எப்போதும் தூய்மையாக பராமரித்து வரவேண்டும்.
- பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் Electrical உபகரணங்களை கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டு Delivery Challan-ஐ தலைமை ஆசிரியர்கள் ஸ்கேன் செய்து EMIS பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

- அவ்வாறு பெறப்படும் Electrical உபகரணங்கள் உள்ள பெட்டிகளை பிரிக்காமல் Electrical வேலைகள் செய்வதற்கு சார்ந்த பள்ளிக்கு வரும் Technician-யிடம் தலைமையாசிரியர் ஒப்படைத்தல் வேண்டும்.
- அந்தந்த பள்ளிகளுக்குட்பட்ட வட்டாரத்திற்கு அருகிலிருந்து Electrical உபகரணங்களை பொருத்த வரும்போது அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு Technician அல்லது KELTRON நிறுவனத்தின் Help Deskல் உள்ள நபர்கள் தொடர்பு கொண்டு அவர்களின் வருகையை உறுதிப்படுத்துவார்கள்.

**செய்ய வேண்டியவை:**

- அனைத்து மின் மற்றும் மின்னணு சாதனங்களையும் (Desktop, Projector, Speaker, etc.,) தூசி மற்றும் ஈரப்பதம் இல்லாத சூழலில் பராமரித்து வர வேண்டும்.
- எப்போதும் UPS, Desktops, Router, Internet device and IP Camera ஆகியவற்றை Power On நிலையில் வைத்திருத்தல் வேண்டும். Power On LED விளக்கு ஒளிருவதை உறுதி செய்தல் வேண்டும்.
- Desktop-யினை பள்ளி வேலை நேரங்களில் Power On செய்து இயங்க வைக்கவும் மற்ற நேரங்களில் Shut Down செய்து அணைத்திடவும் வேண்டும்.
- தலைமையாசிரியர் அனைத்து வகுப்புகளுக்கும் உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தின் பயன்பாட்டிற்கான கால அட்டவணையை பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து தயாரித்திடல் வேண்டும். மேலும் கல்வி நோக்கத்திற்காக அனைத்து Desktop-களையும் தவறாது பயன்படுத்திடல் வேண்டும்.
- மாணவர்களின் பயன்பாட்டிற்காக அனைத்து Desktopயிலும் offline App-க்கள் மற்றும் இணைய இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- Printer மற்றும் Scanner-களை கற்றல் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.
- ஒவ்வொரு Desktop-ம் ஒரு Splitter மற்றும் இரண்டு Head Phone-கள் உடன் எப்போதும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- Head Phones மொழி ஆய்வகத்திற்கும் (Language Labs) மற்றும் கல்வி நோக்கத்திற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

- UPS, Projector, Printer, கணினி மற்றும் இதர உபகரணங்களில் ஏதேனும் குறைபாடு இருந்தால், உடனடியாக Ticket Raise செய்தல் வேண்டும்.
- இணைய இணைப்பு எப்பொழுதும் சரியாக இயங்குகிறதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- இணைப்பில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், ISP-இன் உதவியுடன் உடனடியாக அவை சரிசெய்யப்படல் வேண்டும்.
- IT அமைப்புகளை கையாளவோ/ இயக்கவோ O&M கையேட்டின் நகலினை பயன்படுத்துதல் வேண்டும்.
- Desktop மற்றும் Projector ஆகிய கருவிகளை எப்பொழுதும் முறையாக Shut Down செய்தல் வேண்டும்.
- Projector AV அமர்வுகளின் போது மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும். மற்ற நேரங்களில் Projector-ஐ Power Off- செய்திடல் வேண்டும்.
- Projector-ஐ On மற்றும் Off செய்ய ரிமோட் கண்ட்ரோலை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.
- Main Power Input 230 Volts ஆகவும் மற்றும் Main supply-ல் எந்த ஏற்ற இறக்கமும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- பெரு மழை மற்றும் கனமழைக் காலங்களில் Server உட்பட அனைத்து மின் சாதனப் பொருட்களையும் மின் பாதிப்பில் இருந்து பாதுகாக்கும் விதமாக அணைத்து வைக்க (Shut Down) வேண்டும்.
- ஆய்வகத்திற்குள் எலி, கரப்பான் பூச்சி, பல்லி போன்றவை இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- திருட்டு மற்றும் தீ விபத்துக்கள் ஏற்பட்டு பாதிப்புகள் உண்டாகும் சூழலில் அருகாமை காவல் நிலையத்தில் புகார் செய்து உடனடியாக FIR பதிவு செய்யப்பட வேண்டும். KELTRON மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு அது தொடர்பான தகவல்களை தெரியப்படுத்துதல் வேண்டும். இதன் மூலம் உரிய இழப்பீட்டு தொகை கோரி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- புயல் மற்றும் பெருமழையினால் ஏற்படும் வெள்ள பாதிப்புகள் (Flood Damages) குறித்து உடனடியாக KELTRON மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலம் உரிய இழப்பீட்டு தொகை கோரி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

www.Padasalai.Net

தவிர்க்கப்பட வேண்டியவை:

- பாதுகாப்பு காரணங்களுக்காக Desktop-ல் உள்ள USB Port-கள் முடக்கப்பட்டு இருக்கும். Pen drive போன்ற எந்த தகவல் சேமிப்பான்களையும் எந்த Desktop சாதனங்களிலும் இணைத்தல் கூடாது.
- பணியாளர்கள் தங்கள் சொந்த செயல்பாடுகளுக்கு Desktop மற்றும் Internet ஆகியவற்றைப் பயன்படுத்துதல் கூடாது. அனைத்து அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் பதிவுகள் CCC-யிலிருந்து 24 x 7 மானிட்டரில் பதிவு செய்யப்படும்.
- மாணவர்கள் Printer-ஐ பயன்படுத்த அனுமதிக்க கூடாது.
- மின் கேபிள்கள், ஸ்பீக்கர் கேபிள்கள் மற்றும் ஹெட்ஃபோன்களை இழுக்கவோ/ அகற்றவோ கூடாது.
- அனைத்து IT Assets மற்றும் நாற்காலி, மேசைகள் போன்ற Non - IT Assetsகள் சேதமடையக் கூடாது.
- மாணவர்களோ அல்லது ஆசிரியர்களோ எந்தவொரு உள்ளமைவையும் (configuartion) மாற்றவோ அல்லது server-லிருந்து எந்த OS உள்ளமைவு கோப்பினை நீக்கக் கூடாது.
- CCC-ன் அனுமதியின்றி வேறு எந்த OS மற்றும் Software-யும் நிறுவ முயற்சிக்கக் கூடாது.
- தனிப்பட்ட Hotspot / Wi-fi-ஐ பயன்படுத்தக் கூடாது.
- ஆய்வகத்திற்குள் எந்த உணவுப் பொருட்களையும் எடுத்து செல்லவோ அங்கு வைத்து சாப்பிடவோ அனுமதிக்கக் கூடாது.
- ஆய்வகத்தின் பொறுப்பு ஆசிரியர் இல்லாத நிலையில் ஆய்வகங்களில் மாணவர்கள் தனியாக இருக்க அனுமதிக்கக் கூடாது.
- கூடுதல் புத்தகங்கள், சீருடைகள், பெஞ்சுகள், மேஜைகள், நாற்காலிகள், மிதிவண்டிகள் மற்றும் பயன்படுத்தப்படாத இதரப் பொருட்களை பத்திரப்படுத்தும் இடமாக உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களைப் பயன்படுத்த கூடாது.

பிரிவு அலுவலர்.